Ti Nb
Ir Ta
Ru Pt

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
An ISO 9001 : 2008 Certified

Tiaano® Innovation In Inert Metals
23 YEARS Since 1992

# 48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: +91 44 2278 1148 Fax: 22781362 Mob: +91 94445 69900 Email: marketing@tianode.com Web: www.tianode.com

# "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## GOAL 2016-2017

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 120% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers…**
  - Up to Apr. 16 : 951 Nos.
  - Up to Mar. 16 : 941 Nos.
- **Performance Apr. 16 …**
  - Turnover growth : 0.41%
  - Employment growth : -3.36%
  - 100% Attendance : 17.91 %

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano® Innovation In Inert Metals – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil Results for environment – Water Treatment Equipments.

Fib Tec COMPOSITE – FRP/ GRP Equipments.

HydroGen™ Go Green – HHO Generators

Titanictrade WE DELIVER VALUE CHAIN – Portal for Exotic Metals

Tiaano Vidyashrm – Tiaano Vidyashrm (CBSE Curriculam)




## கோபம்

ஒரு ஊரில் ஒரு இளைஞன் இருந்தான். அவன் எப்போதும் கோபப்படும் சுபாவத்தை உடையவன். ஒருமுறை அவனது நண்பன் அவனிடம் ஆணிகள் நிரம்பிய பையை கொடுத்தான். நீ எப்போதெல்லாம் கோபப்படுகிறாயோ அப்போதெல்லாம் ஒரு ஆணியை இந்த சுவற்றில் அடிக்கவும் என்றான்.

இளைஞனும் அப்படியே செய்தான். முதல் நாள் அவன் 35 ஆணிகளை அறைந்தான். மறுநாள் படிப்படியாக ஆணிகளின் எண்ணிக்கை குறைந்து இறுதியில் ஒரு ஆணிக்கூட அறையப்படாத நாளும் வந்தது. சில நாட்களிலேயே அவன் கோபப்படுவதை நிறுத்தி விட்டான். அதனால் அவன் ஆணிகளை அடிக்கவில்லை. அதை அவனது நண்பன் பார்த்து பெருமைப்பட்டான். அவனை முழுவதுமாக திருத்த ஆசைப்பட்ட அவன் அவனிடம் அடித்த ஆணிகளை பிடுங்கச் சொன்னான்.

இளைஞனும் அப்படியே செய்தான். அதை பார்த்த அவன் நண்பன் அவனிடம் சொன்னான். என் நண்பனே நான் சொன்னபடியே எல்லா வேலைகளையும் செய்தாய். இப்போது நீ அடித்த ஆணிகள் பிடுங்கப்பட்டு விட்டன. ஆனால் ஆணி அடித்த ஓட்டைகளை பார். இந்த சுவர் முன்னால் இருந்த மாதிரியில்லை.

அதுபோலத்தான் நீ கோபத்தில் சொல்லும் வார்த்தைகளும் செயல்களும் ஒரு வடுவை உண்டாக்கி விடும். நீ என்னதான் உன் செயல்களுக்கு மன்னிப்பு கேட்டாலும் அந்த வடு மாறாது, மறையாது. நீ வார்த்தைகளால் உண்டாக்கும் வடுவிற்கும் செயல்களால் உண்டாக்கும் வடுவிற்கும் எந்தவொரு வித்தியாசமுமில்லை.

*Compiled By : Ms. P. E. Nancy*
*Director - Admin*

## இயல்பை ஏற்றுக்கொள்

வாழ்க்கையே ஒரு நதியின் பிரவாகம் போன்றது. மலையில் பிறந்த நதி கடலில் சென்று முடிவது போல கருவறையில் பிறந்த வாழ்வு கல்லறையில் முடிகிறது. இடையிடையே எத்தனையோ மேடு பள்ளங்கள், ஆராவாரங்கள், மோதல்கள், அத்தனை ரணங்களையும் போராட்டங்களையும் அப்படியே ஏற்றுக்கொள். வாழ்க்கையை அதன் போக்கில் அப்படியே ஏற்றுக்கொள். எதையும் திணிக்காதே. எதையும் மறுக்காதே. இயல்பை இயல்பு என உணர்ந்து அந்த இயல்போடு ஏற்றுக்கொள்.

குறிப்பிட்ட ஒரு பொருளால் ஒருவனுக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது என்றால் அந்தப் பொருள் அவனை விட்டு நீங்கிவிட்டால் அந்த மகிழ்ச்சியும் அவனை விட்டுப் போய்விடும். குறிப்பிட்ட செயலால், நோக்கத்தால், ஒருவனுக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது என்றால் அந்த செயல் முடிவடைந்த பின்னர் அந்த மகிழ்ச்சி அவனிடம் காணாமல் போய்விடும். இங்கே மகிழ்ச்சி வெளியிலிருந்து வருவதல்ல. அது உள்ளிருந்து பொங்கிப் பெருகுவது. எப்போதும் பரவச நிலையில் இருப்பது.

*Compiled By : Mrs. M. Sudha*
*Marketing*

## FUNCTIONAL WISHES



Father's Day
19th June

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

Banking : M/s. UCO Bank

Auditing : M/s. Nisar & Kumar

AQ Auditing : M/s. Juran Quality

Legal Advisers : Lr. M.K. Govindan

: Lr. V. Benedict Vincent

Tech. Consultant: Dr.G.S. Viswanath

Central Excise : Mr. R. Raghavan

Health Care : M/s. Bethesda Hospital

Tel: 22294565

ESI Corporation : Tambaram Dispensary

Tel: 044 2226 0194

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



| | | |
|---|---|---|
| **Mr. S.K. Saravanan** | - Fibtec | 01st Jun. |
| **Mr. N. Ramachandran** | - Facilitation | 02nd Jun. |
| **Mr. S. Samuel** | - Admin | 03rd Jun. |
| **Mr. K. Kanthan** | - Purchase | 05th Jun. |
| **Mr. P. Parthasarathy** | - Production | 05th Jun. |
| **Mr. P. Ravi** | - Coating | 06th Jun. |
| **Mrs. V. Rajakumari** | - Admin | 07th Jun. |
| **Mr. G. Vignesh** | - Q. C | 08th Jun. |
| **Mr. A. Sekar** | - Production | 09th Jun. |
| **Mr. G. Muthu** | - Production | 10th Jun. |
| **Mr. C. Babu** | - Finance | 10th Jun. |
| **Mr. R. Narayanan** | - Production | 11th Jun. |
| **Mr. M. Sreetharan** | - Production | 12th Jun. |
| **Mrs. T. Jayalatha** | - Finance | 15th Jun. |
| **Mr. M. Gurunathan** | - Production | 15th Jun. |
| **Mr. R. Benjamin Michael** | - Production | 19th Jun. |
| **Mr. S. Shaju** | - Q. C | 19th Jun. |
| **Mr. S. Mahesh** | - Fibtec | 20th Jun. |
| **Mr. K.G.Balasubramanian** | - Production | 20th Jun. |
| **Mrs. S. Sahaya Pani Shiny** | - Design | 20th Jun. |
| **Mr. A. Manikantan** | - Fibtec | 20th Jun. |
| **Mr. B. Shankar Babu** | - Purchase | 20th Jun. |
| **Mr. G. Gnanasekar** | - Production | 22nd Jun. |
| **Mr. T. Rajakumaran** | - Coating | 22nd Jun. |
| **Mr. S. Pavithran** | - Design | 23rd Jun. |
| **Mr. P. Gopalakrishnan** | - Production | 26th Jun. |
| **Mr. L. Justin Jaya Kumar** | - Production | 29th Jun. |

**Best Wishes from Tiaano Employees**

## Know Your Fire Extinguisher

| *Symbols found on fire extinguishers and what they mean* | RED WATER | CREAM FOAM SPRAY | BLUE ABC POWDER | BLACK CARBON DIOXIDE | YELLOW WET CHEMICAL |
|---|---|---|---|---|---|
| Wood, paper & textiles (A) | ✓ | ✓ | ✓ | X | ✓ |
| Flammable Liquids (B) | X | ✓ | ✓ | ✓ | X |
| Flammable Gases (C) | X | X | ✓ | X | X |
| Electrical Contact | X | X | ✓ | ✓ | X |
| Cooking oils & fats (F) | X | X | X | X | ✓ |

*Compiled By : Mr. S. Mathikrishnan*
*Marketing*

### வெற்றியின் ரகசியம்

நோபல் பரிசு பெற்ற இந்திய விஞ்ஞானி சர்.சி.வி.ராமன் தன் இளம் வயதிலேயே சிறந்த அறிவாளியாக விளங்கினார். ஆனால் அவர் எந்த வேலையையும் மன ஒருமைபாட்டுடன் செய்யவில்லை. ராமனின் போக்கை கண்ட அவரது தாயார் மிகவும் வருந்தினார்.

ஒருமுறை, அவர் ராமனை ஒரு பூதக்கண்ணாடியை கொண்டு வரச் சொன்னார். சில காகிதங்களைக் கீழேப் போட்டு பூதக்கண்ணாடியை வெயிலில் காட்டினார். பூதக்கண்ணாடியை பிடித்த தாயின் கைகள் அங்கும் இங்குமாய் அசைந்து கொண்டிருந்தது. நீண்ட நேரத்திற்கு பின் தனது கையை பூதக்கண்ணாடியின் ஒளிகுவி மையம் காகிதத்தில் படுமாறு கவனமாக பிடித்தார். சில நொடிகளல் காகிதத்தில் தீப்பற்றியது. அதைக்கண்ட ராமன் மிகவும் ஆச்சரியப்பட்டார்.

அப்போது ராமனின் தாயார், "ஒருமுகப்படுத்திய ஒளிக்கதிர்தான் நெருப்பாகி காகிதத்தை எரிக்கும், ஒருமுகப்படுத்தாத ஒளிக்கதிரில் நெருப்பு உண்டாகாது. அது போல நீயும் மனதை ஒருமுகப்படுத்தினால் எந்த வேலையிலும் வெற்றி அடையலாம். அதனால் மனதை ஒருமுகப்படுத்தி வேலையில் ஈடுபடப் பழகிக்கொள்" என்றார். ராமன், தனது தாயின் வார்த்தைகளை மனதில் பதிய வைத்துக் கொண்டார்.

அன்று முதல், மன ஒருமைப்பாட்டுடன் செயல்களைச் செய்யத் தொடங்கினார். பின்னாளில் உலகம் போற்றும் விஞ்ஞானியாகவும் புகழ் பெற்றார்.

*Compiled By : Miss. R. Divya*
*Design*

## தெரிந்து கொள்வோம்

### Foods to Eat to Control High Blood Pressure

1. Garlic is natural medicine for treating high blood pressure.
2. Don't add salt.
3. Regular physical activity – at least 30 to 60 minutes.
4. Apple cider vinegar – Vinegar alkalizes the body and lowers your blood pressure.
5. Avoid coffee.
6. Cucumber – Eat 2 fresh cucumbers every day for 2 weeks.

*Compiled By : Miss. P. Nirmala Devi*
Finance

### குளிரூட்டப்பட்ட நீர் வேண்டாமே!

இன்றையக் காலத்தில் வெயிலுக்கு அனைவரும் விரும்புவது குளிரூட்டப்பட்ட நீரைத்தான். ஆனால் அதனால் ஏற்படும் பின் விளைவுகளை யாரும் அறிவதில்லை.

- ✓ சாப்பிட்ட உடன் குளிரூட்டப்பட்ட நீரை குடிப்பதால் செரிமான கோளாறை உண்டாக்கும்.
- ✓ பற்கூச்சத்தை உண்டாக்கும்.
- ✓ உடற்பயிற்சி செய்யும் போது குளிரூட்டப்பட்ட நீரைக் குடிப்பதால் உடம்பிற்கு தீங்கு உண்டாக்கும்.
- ✓ அடிக்கடி குளிரூட்டப்பட்ட நீரைக் குடிப்பதால் உடம்பில் நீண்ட நாள் பிணியை உண்டாக்கும்.

### Home remedies for Burns

- Applying tea bags on the affected area provides a soothing effect.
- Turmeric eases pain and inflammation caused by burns.
- Plantain leaves aid in quick healing and relief.
- Use of honey helps to prevent infections on the affected area.
- Cold water aids in providing relief from burns.
- Tea tree oil and lavender oil are effective in treating burns.
- Applying aloe vera, boiled potatoes and papaya aids in quick recovery.

*Compiled By : Miss. T. Regi*
Facilitation

## Computer கவிதை

1. Bug கண்டுபிடித் தாரை ஒறுத்தல்
   Debug செய்து விடல்
2. Copy Paste செய்து வாழ்வாரே வாழ்வார்
   மற்றெல்லாம் கைவலித்து சாவார்.
3. எம்மொழி மறந்தவர்க்கும் Job உண்டாம்
   Job இல்லை C-யை மறந்தவர்க்கு.
4. Logic Syntax இவ்விரண்டும் கண்ணெனப்ர
   Programme எழுது பவர்.
5. யாகாவாராயினும் Password காக்க காவாக்கால்
   சோகாப்பர் hack செய்யப்பட்டு.
6. எப்பதிவு யார்யார் blog-ல் படிக்கினும்
   அப்பதிவு own பதிவு காண்பதுஅறிவு.
7. Chatta-லில் chatடுக வெப்கேமராவுடன் அதுவின்றேல்
   Chatta-லின் chatta-மை நன்று.
8. Bench Project E-mail இம்மூன்றும்
   Programmer வாழ்வின் தலை.
9. மக்குஇவன் எனபெயர் வாங்கிய ஒருவர்க்கு
   Wiki pedia-வே துணை.
10. எழுதுக பதிவை பிழையின்றி எழுதியபின்
    பழுதில்லா பின்னூட்டம் காண்.

*Compiled By : Mrs. T. Gowsala*
Marketing

### நம்பித்தான் ஆகவேண்டும்
### 5S (தொடர்ச்சி LIII)

**ஜாக்கிரதை**

இதன் அர்த்தம், அம்புக்குறி எந்தத் திசையில் பார்க்கிறதோ, அப்படித்தான் அந்தப் பெட்டியை அடுக்கவேண்டும். தலைகீழாகத் திருப்பிவைத்தால், உள்ளே இருக்கிற டிவியோ, வாஷிங்மெஷினோ கோளாறாகி விடலாம்.

அடுத்து, பெட்டிகளை அடுக்கும்போது அம்புக்குறிக்குப் பக்கத்தில் உள்ள எண் எதுவோ அதைக் கருத்தில் கொள்ள வேண்டும். '5' என்றால், ஐந்து பெட்டிகளை ஒன்றன்மீது ஒன்றாக அடுக்கலாம். அதற்குமேல் போனால் ஆபத்து.

இந்தத் தகவல்கள் அதிக எண்ணிக்கையில் சேர்த்து வைக்கப்படுகிற எல்லாப் பொருள்களுக்கும் குறிப்பிடப் பட்டிருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால், உற்பத்தியாளரிடமே இதைக் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்வது நல்லது.

இதேபோல், சில பொருள்களைக் கையாள்வதில் கூடுதல் கவனம் வேண்டும். முக்கியமாக, உடையக்கூடிய பொருள்கள். வேறு சில பொருள்களின் அருகே, காந்தம் போன்றவற்றைக் கொண்டு செல்லக் கூடாது. சிலவற்றை வெறும் தரையில் வைக்கக்கூடாது. இதுபோன்ற குறிப்புகளும், அந்தந்தப் பெட்டிகளிலேயே குறிப்பிடப்பட்டிருக்கும். அவற்றைக் கவனத்தோடு பின்பற்றுவது அவசியம்.

கனமான பொருள்களைக் சேமிக்கும்போது, அவற்றை எடுத்துச் செல்ல

## கவிதைகள்

### முயற்சி

நீ தோற்கும் போது வரும் அழுகை
அந்த தோல்வியை கரைத்திடாது...
நீ வேதனையில் வாடுவதால்
கடந்த காலம் மாறிடாது...
சோகம் என்பதை உனக்குள் புதைப்பதால்
உலகம் உனக்காக பரிவு காட்டாது...
துயரத்தை விடு கண்ணீரை எடு
முயற்சியாய் போராரிடு...
முடிந்த காலத்தை மாற்ற முடியாது
எதிர்காலத்தை மாற்றிடு...
முயற்சியோடு கவலையைவிட்டு...

### அம்மா

அடி முடி தேடினாலும்
அகராதியை புரட்டினாலும்
முழுமையான அர்த்தம்
அறிய முடியாத உயிர்ச் சித்திரம் அம்மா...

*Compiled By : Miss. P. K. Rajeswari*
*Finance*

### வாழ்க்கையின் ரகசியம்

நடந்ததை மறந்துவிடு!
நடப்பதை நினைவில் கொள்!
நடக்க இருப்பது நலமாக அமையும்!

*Compiled By : Mrs. J. Gayathiri*
*Receptionist*

## ஹைக்கூ

அடுத்த நொடி ஒழித்து வைத்திருக்கும்
அதிசயத்தில் மரணம் கூட இருக்கலாம்
என்பதால் வாழும் வரை ஆணவம்,
அகங்காரம், கோபம், செருக்கு, தற்பெருமை
போன்ற குப்பைகளின்றி வாழ்வோம்...!

*From our Whatsapp Group*

## சிந்தனைக்கு

திட்டமிட்ட செயல் நிகழும் என்ற நம்பிக்கை உணர்வுதான் நம்மை சாதனைக்கு இட்டுச்செல்லும் வழிமுறையாக இருக்கிறது. நம்பிக்கையும், மனஉறுதியும் இல்லாமல் எந்தவொரு சாதனையும், வெற்றியும் நிகழ்த்தப்படுவதற்கு சாத்திய – மில்லை.

*Compiled By : Mr. K. Manivannan*
*Marketing*

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

ஏற்பாடுகளையும் கூடவே செய்திருக்க வேண்டும். இல்லாவிட்டால், அந்தப் பொருள்களைத் தேடி வருகிறவர்கள் ஒவ்வொருமுறையும் சிரமப்படுவார்கள்.

இதற்காகத்தான், விமான நிலையங்களில் பெட்டிகள் வருகிற ‘கன்வேயர் பெல்ட்’களின் அருகேயே, டிராலிகளை வைத்திருக்கிறார்கள். கனமான பெட்டிகளை இவற்றில் வைத்து நகர்த்திச் சென்றுவிடலாம்.

தொழிற்சாலைகளிலும் இப்படிப்பட்ட டிராலிகள் இருக்கும். அவற்றைச் சேமிப்புப் பகுதிகளின் அருகே நிறுத்திவைப்பது உடனடிப் பயனளிக்கும். இந்தப் பொருளை இப்படித் தூக்க வேண்டும். இப்படி நகர்த்திச் செல்ல வேண்டும் என்பது போன்ற குறிப்புகளையும் அங்கேயே எழுதிவைக்கலாம்.

பொருள்களை நகர்த்திச் செல்வதிலும், சில ஒழுங்குமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். இயந்திரப் பகுதிகளைப் பாதிக்காதபடி, இதற்கென்று தனி இடங்கள் ஒதுக்கப்பட்டு, அவை பெயிண்ட் கொண்டு வரையப்பட்டிருக்க வேண்டும். அப்போதுதான், யாருக்கும் தொந்தரவு இல்லாதபடி, தொழிலாளர்கள் தங்களுக்கு வேண்டிய கருவிகள், உபகரணங்கள், மூலப் பொருள்களை நகர்த்திச் செல்லலாம்.

தேவையானது, தேவையான நேரத்தில் கிடைக்க வேண்டும். அது எங்கே கிடைக்கிறது என்கிற விவரம் எல்லாருக்கும் தெரிந்திருக்க வேண்டும் என்கிற ‘செய்டன்’ கொள்கைகளை, தொழிற்சாலைகளுக்கு வெளியே வேறு சில துறைகளிலும் சிறப்பாகப் பயன்படுத்துகிறார்கள். உதாரணமாக, பெரிய நிறுவனங்களில் ஏகப்பட்ட விதிமுறைகள், தகவல்கள் குவிந்து கிடக்கும். புதிய ஊழியர்கள் இவற்றை எல்லாம் எப்படி அறிந்து கொண்டு பயன்பெறுவது?

தொடரும்...

## BE 100% READY TO VOTE

